**தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பதிவேடுகள் மற்றும் பத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிணைப் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

(ஆ) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு

-------------------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நிறுவனத்தின் மின் உபகரணங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நிறுவனத்தில் மின்சார உபகரணங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

(இ) விடுமுறைப் பதிவேடு

--------------------------------

| | | |
|---|---|---|
| தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தில் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறை தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் விடுமுறைப் பதிவேடு 80 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய குறைபாடுகளை நாளதுவரையாக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் புதிய மீளாய்வு மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். |

முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| நிதிப்பிரமாணம் 115 | 3,601,922 | முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அச்சிடல் நடவடிக்கைகளுக்காக செலுத்த வேண்டிய பணம் 2019 ஆம் ஆண்டில் செலுத்தும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அதற்காக ஏற்பட்ட ரூபா 3,587,242 தொகையை செலுத்தும் போது நிதிப் பிரமாணம் 115 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 14,680 தொகையான பட்டியலுக்காக இது வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களம் திட்டமிடப்பட்ட பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதிக்கும் கோரப்பட்ட கட்டுநிதிக்குமிடையே ரூபா 119 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதனை திட்டமிடப்பட்ட பிரகாரம் கோரப்படவேண்டிய கட்டுநிதியில் 85 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே கோரப்பட்ட கட்டுநிதிக்கும் கிடைத்த கட்டுநிதிக்கும் இடையே ரூபா 134 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அது கோரப்பட்ட கட்டுநிதியில் 52 சதவீத குறைவாகும். | உரிய பிரகாரம் கட்டுநிதி திட்டமிடப்பட்ட வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதி கோரப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி கட்டுநிதி கோரப்படாதிருந்தமையை குறிப்பிடுவதுடன் அது கோரப்பட்ட அளவினைவிட குறைவான கட்டுநிதி தொகையொன்று திறைசேரியில் இருந்து கிடைத்திருந்தமையை குறிப்பிடுகின்றோம். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டவணை இலக்கம் (iii) இன் கீழ் வருகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியினால் விநியோகிக்கப்படுகின்ற பொறுப்புக்களுடன் இணக்கஞ் செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 6,694,255 தொகையான | சுற்றறிக்கையின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியினால் விநியோகிக்கப்படுகின்ற பொறுப்புக்களுடன் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். | திறைசேரியினால் விநியோகிக்கப்பட்டுள்ளபொறுப்புக்கள் கூற்று பிழையாக இருந்ததுடன் அது செலவின தலைப்பின் பிரகாரம் ஒப்பிடுவதற்கான தகவல்கள் வழங்கப்படாதிருந்தமையினால் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 6,694,255 தொகையான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையை குறிப்பிடுகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்றுடன் இணக்கஞ் செய்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | செலவின விடயம் 2001 கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,441,483 தொகையான பொறுப்புக்களுக்கு பதிலாக ரூபா 3,761,139 தொகை பொறுப்பாக காண்பிக்கப்பட்டமையால் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,319,656 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புக்களின் பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமைக்கு கண்காணித்து கொள்ளப்படும் என்பதுடன் உரிய உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பாக ஆலோசனை வழங்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப்பெறாமை.

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது சிங்களம் - தமிழ் மற்றும் தமிழ் - சிங்களம் 02 மொழிபெயர்ப்பு மென்பொருளை தயாரிப்பதற்காக ரூபா 7,240,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் அந்த மென்பொருளை பயன்படுத்தி சிங்களம் - தமிழ் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இந்த மொழிபெயர்ப்பு மென்பொருளின் நடவடிக்கைகள் நூற்றுக்கு நூறு சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மென்பொருளின் சரியான தன்மையின் அதிகரிப்பு, உள்ளடக்கி பெறப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள தரவுக்கு ஒப்பாக 100 சதவீத சரியான மொழிபெயர்ப்பொன்று மொன்பொருளில் இருந்து கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அதனால் மீண்டும் மொழிபெயர்ப்பாளர் ஒருவரினால் பரீட்சித்து மீளமைக்கப்பட வேண்டும். தற்போது இந்த திணைக்களத்தில் உள்ள மொழிபெயர்ப்பாளர்கள் இந்த மென்பொருளை அந்த மட்டத்தில் பயன்படுத்துகின்றனர். |

## 3.2 பெறுகைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ''பஸ வடமு - ஹத தினமு'' பேசும் மொழிநிகழ்ச்சித் திட்டத்தின் விளம்பரப்படுத்தல் இணைப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 1.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் விளம்பர நிறுவனமொன்றை தெரிவுசெய்யும் போது 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாளர் விலைகள் கோரப்பட வேண்டும். | ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடன் இந்தநிகழ்ச்சித் திட்டத்தை தொடர்புபடுத்தும் நிறுவனங்கள் சில காணப்படாமையினால் அதனிடையே ஆகக் குறைந்த கூறு விலையுடன் நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. |
| (ஆ) இரண்டாம் மொழி பரீட்சாத்திகளுக்கு மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அறிவுறுத்தும் சுவரொட்டிகள் அச்சிடுவதற்காக ரூபா 665,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்வி திறக்கும் போது சகல குழு அங்கத்தவர்களினாலும் கையொப்பமிட வேண்டியிருந்தமை | இதற்குப் பின்னர் அவ்வாறான தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு கண்காணித்து கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும். |

## 4. நல்லாளுகை

---

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 1 பந்தியின் பிரகாரம் திணைக்களம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட போதும் இது வரையிலும் அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அந்த பதவிக்காக உத்தியோகத்தர் |

| | | |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபித்திருக்கவில்லை. | | ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் உள்ளக கணக்காய்வு அலகொான்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குறிப்பிடுகின்றோம். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடப் பதவிகளின் எண்ணிக்கை 45 ஆகும். | அத்தியவசிய பதவிகளுக்காக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்காக திணைக்கள ஆட்சேர்ப்பின் கீழும் ஏனைய வெற்றிடங்களுக்காக உரிய சேவைகளின் கீழும் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து கோரப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றோம். |
| (ஆ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 2018/02 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினரின் சகல அங்கத்தவர்களும் வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்றை உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டிற்காக மனிதவள அவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | திணைக்கள உத்தியோகத்தரின் பயிற்சி தேவையினை பெற்று திணைக்களத்திற்கு பயிற்சி நிறுவனங்களில் இருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். |